RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 309 | நவம்பர்.9 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## புதிய டிஜிபியை நியமிக்கும் விவகாரத்தில் 3 வாரங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும்: தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு



புதுடெல்லி, நவ.09-

தமிழக டிஜிபி நியமனம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 3 வாரங்களுக்குள் பதில் அளிக்க தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த கிஷோர் கிருஷ்ணசாமி சார்பில் வழக்கறிஞர் எம்.வீரராகவன் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், தற்போதுள்ள டிஜிபி பதவிக்காலம் முடியும் முன்னரே, அடுத்த டிஜிபிக்கான பெயர் பட்டியலை யுபிஎஸ்சிக்கு குறைந்தபட்சம் 3 மாதங்களுக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும். தற்காலிக டிஜிபி என யாரையும் எந்த மாநிலமும் நியமிக்கக் கூடாது எனப் பிரகாஷ் சிங் வழக்கில் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவை தமிழக அரசு அமல்படுத்தவில்லை.

இதற்காக தமிழக தலைமை செயலாளருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்து மதுரையைச் சேர்ந்த மனித உரிமைகள் செயல்பாட்டாளர் ஹென்றி திபேன் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் தமிழக அரசு அனுப்பியுள்ள பெயர் பட்டியலை விரைந்து யுபிஎஸ்சி பரிசீலிக்க வேண்டும். யுபிஎஸ்சி பரிந்துரையின் பேரில் நிரந்தர டிஜிபியை தமிழக அரசு விரைந்து நியமிக்க வேண்டும் என உத்தரவிட்டது. மேலும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் கடந்த செப்.7ம் தேதி முடித்து வைத்தது.

இந்நிலையில், யுபிஎஸ்சி பரிந்துரைத்தும் டிஜிபியை நியமிக்க தமிழக அரசு மறுத்து வருகிறது. நிரந்தர டிஜிபியை நியமிக்காமல், ஆளுங்கட்சிக்கு சாதமாக செயல்படும் வகையில் தற்காலிக டிஜிபி பணியில் தொடர்கிறார். இந்த விவகாரத்தில் கடுமையான உத்தரவுகளை பிறப்பிக்கும் வரை உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை தமிழக அரசு செயல்படுத்தாது.

எனவே, பிரகாஷ் சிங் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் தமிழக அரசின் தலைமைச் செயலருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரகாஷ் சிங் வழக்கின் தீர்ப்பின் படி விரைந்து டிஜிபியை நியமிக்க உத்தரவிட வேண்டும் என்று கிஷோர் கிருஷ்ணசாமி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை உச்ச நீதிமன்றதலைமை நீதிபதி பி.ஆர். கவாய்தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்தது. மனுதாரர்சார்பில் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண் ஆஜரானார். தமிழக அரசின் சார்பில் பதில் மனுத்தாக்கல் செய்ய அவகாசம் கோரியதை தொடர்ந்து,3 வாரங்களுக்குள் பதில் மனு தாக்கல் செய்ய நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டது.

## திமுகவை எந்தக் கொம்பனாலும் தொட்டுக்கூட பார்க்க முடியாது

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆவேசம்



சென்னை, நவ.9-

இன்றைக்கு யார் யாரோ கிளம்பி வந்து திமுகவை அழித்துவிடலாம் என கனவு காண்கிறார்கள். ஆனால், திமுகவை எந்தக் கொம்பனாலும் தொட்டுக்கூட பார்க்க முடியாது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை அறிவாலயத்தில் நேற்று நடைபெற்ற திருமண விழாவில் கலந்து கொண்டு திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரையில் பேசியதாவது: நெருக்கடி காலக்கட்டத்தில் திமுக சந்தித்த தியாகங்கள் நிறைய உண்டு. அதையெல்லாம் கடந்து வந்ததால்தான் இன்றைக்கும் திமுக கம்பீரமாக உயர்ந்து வருகிறது. ஆனால், இன்றைக்கு யார் யாரோ கிளம்பி, இந்தக் கட்சியை அழித்து விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். எந்தக் கொம்பனாலும் இந்த இயக்கத்தை தொட்டுக்கூட பார்க்க முடியாது.

இதற்கிடையே வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதை எதிர்த்து அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி தீர்மானம் போட்டு அந்த அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளோம். சட்டப் போராட்டம் ஒரு பக்கம் நடந்தாலும் எஸ்ஐஆர் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனவே, திமுக தொண்டர்கள், நிர்வாகிகள் அதை தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

இதுதொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதை சரிசெய்ய திமுக சார்பில் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து உங்களுக்கு ஏதேனும் உதவிகள் தேவைப்பட்டால், அந்தத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம். தமிழகத்தின் ஜனநாயகத்தை காக்கும் காவலர்களாக பூத் ஏஜென்ட்கள் செயல்பட வேண்டும். அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நாம் வெற்றிபெற பணியாற்ற வேண்டும். மேலும், எஸ்ஐஆர் பணிகளை கண்டித்து மாவட்ட தலைநகரங்களில் நவம்பர் 11ல்நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டங்களில் தொண்டர்கள் திரளாக பங்கேற்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## போதைப் பொருள் பயன்பாட்டை எதிர்த்து திருச்சியில் இருந்து மதுரை வரை ஜன.2ல் வைகோ நடைபயணம் தொடக்கம்

சென்னை, நவ.09-

போதைப் பொருட்கள் பயன்பாட்டை எதிர்த்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருச்சியில் இருந்து மதுரை வரை ஜன. 2-ம் தேதி மதிமுக பொதுச் செயலாளர் வைகோ நடைபயணம் தொடங்குகிறார்.

இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: லட்சக்கணக்கான வாக்காளர்களின் வாக்குரிமையைப் பறிக்கும் முயற்சிக்கு எதிராக நவ.11ல் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மதிமுகபெருமளவில் பங்கேற்கும். தமிழகத்தில் போதைப் பொருளுக்கு எதிராக ஜன.2 ம்தேதி திருச்சியில் இருந்து நடைபயணமாக புறப்பட்டு மணப்பாறை, திண்டுக்கல் வழியாக ஜன.12ம் தேதி மதுரையை அடைந்து எங்களது பயணத்தை நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளோம்.

## கொல்லைப்புற வழியாக முதல்வரானவர் பழனிசாமி! முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தாக்கு



சென்னை, நவ.09-

“மூன்று முறை ஓபிஎஸ்ஸை முதல்வராக்கிய ஜெயலலிதா, பழனிசாமியை ஏன் முதல்வராக்கவில்லை? பழனிசாமி கொல்லைப்புற வழியாக முதல்வரானவர் என்பது நாடறிந்த ஒன்று” என முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

கோபிசெட்டிபாளையத்தில் கே.ஏ. செங்கோட்டையன் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் அதிமுக ஆட்சியை மீண்டும் உருவாக்கவே ஒருங்கிணைப்பு கருத்துகளை வெளியிட்டேன். அதனால், கட்சியில் இருந்து நீக்கப்பட்டேன். இன்று, யார் என்னிடத்தில் பேசினாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் நிலை உள்ளது. இது கட்சியை பலவீனப்படுத்தும் வகையில் உள்ளது.

திமுக எம்எல்ஏ வீட்டு பணிப்பெண் தாக்கப்பட்ட விவகாரத்தில் சிபிஐ விசாரணை கேட்ட பழனிசாமி, ஜெயலலிதா வாழ்ந்த கோடநாடு இல்லத்தின் கொலை கொள்ளை வழக்கில் சிபிஐ விசாரணை கேட்டாரா? ஓபிஎஸ்ஸை மூன்று முறை முதல்வராக்கிய ஜெயலலிதா, பழனிசாமியை ஏன் முதல்வராக்கவில்லை? நாங்களெல்லாம் முன்மொழியாமல், பழனிசாமி முதல்வராக ஆகி இருக்க முடியுமா? கொல்லைப்புற வழியாக முதல்வரானவர் பழனிசாமி என்பது நாடறிந்த ஒன்று.

தினகரன் ஆதரவு எம்எல்ஏக்கள் 18 பேர் பதவி நீக்கம் செய்யப்பட்ட போது, ஆட்சியை தொடர தடுமாறிக் கொண்டிருந்தோம். அப்போது ஓபிஎஸ்ஸை அழைத்து, “நீங்கள் கட்சியில் ஒருங்கிணைப்பாளராகவும், துணை முதல்வராகவும் இருங்கள், நான் இணை ஒருங்கிணைப்பாளராக, முதல்வராக இருக்கிறேன்” என்று கூறி ஆட்சியை நடத்திவிட்டு, பின்னர் அவரையும் வெளியேற்றியவர் பழனிசாமி.

4 ஆண்டுகள், அதிமுக ஆட்சியை பாதுகாத்த பாஜக, 2024 தேர்தலில், மோடியை பிரதமராக்க முயற்சி செய்தபோது, அவர்களுக்கான ஆதரவை திரும்பப் பெற்று, “2031 தேர்தலிலும் பாஜகவுடன் கூட்டு இல்லை” என்றார் பழனிசாமி. நாமக்கல் மாவட்ட பிரச்சாரத்தின்போது, “கொடி பறக்குது (தவெக), கூட்டணிக்கு பிள்ளையார் சுழி போட்டாச்சு” என்று பழனிசாமி சொன்னர். ஆனால், தவெக பொதுக்குழுவில் என்ன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதை அறிவீர்கள். ஒற்றுமையுடன் நாம் பலமாக இருந்தால் தான், பிறர் நம்மை நாடி வருவர். இந்த வரலாற்றை தான் எம்ஜிஆர், ஜெயலலிதா படைத்தனர். ஒருவர், தான் முன்னேற வேண்டும் என்றால் தனது கால்களால் நடந்து செல்ல வேண்டும்; பிறரது முதுகில் ஏறி சவாரி செய்யக்கூடாது.

சட்டப் பேரவை 42 நாட்கள் நடைபெற்றபோது, பழனிசாமிக்கு பின்னால் தான் அமர்ந்திருந்தேன். அதிமுக சரியாக இருக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் என்னை கூப்பிட்டு என்ன பிரச்சினை என்று கேட்டிருக்கலாம்; ஒரு வார்த்தைகூட கேட்கவில்லை. இன்று 14 பேரை நீக்கி உள்ளனர். இப்படியே நீக்கிக் கொண்டிருந்தால், முழு நிலவு தேய்ந்து அமாவாசை ஆகிவிடும். பழனிசாமி கட்சியை நடத்தவில்லை; மகன், மாப்பிள்ளை, மருமகன், அக்கா மகன் ஆகியோர்தான் நடத்துகிறார்கள். இந்த இயக்கத்துக்காக தியாகம் செய்தவர்கள் இயக்கத்தை உயிராக நேசித்தவர்கள், இந்த இயக்கத்தைப் பற்றி தெரியாதவர்களிடம் மண்டியிட வேண்டிய நிலை உள்ளது.

பாஜகவினர் தான் என்னை அழைத்து அதிமுக ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்றார்கள். நானும் அதையே தான் சொன்னேன் “இயக்கம் ஒன்றிணைக்கப்பட வேண்டும். உங்களை விட்டால் எங்களுக்கு வேறு வழியில்லை, எங்களை விட்டால் உங்களுக்கும் வேறு வழி இல்லை” என்று சொன்னேன். வரும் தேர்தலில், அதிமுகவை ஆட்சியில் அமர்த்தவும், 2029ல் பாஜகவின் தேவையை பூர்த்தி செய்யவும் வேண்டும் என்றேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.




**சிட்டி ஆப்டிகல்ஸ் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் சிவகங்கை சிவன் கோவில் எதிர்புறம் டி கே ஆனந்த் மஹாலில் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மேல் நடைபெற உள்ளது அனைத்து பொதுமக்களும் தவறாது கலந்து கொண்டு பயன்பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கிறார் சிட்டி ஆப்டிகல்ஸ் உரிமையாளர் S. சதாம் உசேன்**

## 2011ல் செய்த தவறுக்கு இப்போது அனுபவிக்கிறார் ஓபிஎஸ்! வைகோ விமர்சனம்



சென்னை, நவ.09-

முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் கடந்த 2011 சட்டப்பேரவை தேர்தல் சமயத்தில் செய்த தவறுக்கான பலனை தற்போது அனுபவித்து வருவதாக மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

மதிமுக நிர்வாக குழு கூட்டம் சென்னை எழும்பூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அவைத் தலைவர் அர்ஜூனன்ராஜ் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் வைகோ, பொருளாளர் மு.செந்திலதிபன், முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்பி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் பிஹாரில் நடந்த வாக்காளர் திருத்தப் பட்டியலில் நடந்த முறைகேடுகளை தமிழகத்திலும் செயற்படுத்த முனைந்துள்ள தேர்தல் ஆணையத்தின் முயற்சிகளை அனைத்துக் கட்சிகளும் முறியடிக்க வேண்டும். அரசியல் கட்சிகளின் சாலைப் பேரணி மற்றும் பொதுக்கூட்டங்களுக்கு பரிந்துரை செய்துள்ள விதிகளை அரசு மாற்றி அமைக்க வேண்டும் உட்பட 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் கூட்டத்தில் வைகோ பேசியதாவது: கடந்த 2011 சட்டப்பேரவை தேர்தல் சமயத்தில், அதிமுகவிலிருந்து கூட்டணி பேச்சுவார்த்தைக்காக முன்னாள் முதல்வர் ஓபிஎஸ், முன்னாள் அமைச்சர்கள் செங்கோட்டையன், ஜெயக்குமார் உள்ளிட்டோர் மதிமுக அலுவலகத்துக்கு வந்தனர். அப்போது 12 தொகுதிகள் தருவதாக கூறினர். அதை ஏற்க மறுத்து, “மாலை5 மணி வரை காத்திருக்கிறோம். ஜெயலலிதாவிடம் பேசிவிட்டு நல்ல பதிலைக் கூறுங்கள்” என ஓபிஎஸ் உள்ளிட்டோரிடம் கூறி அனுப்பினேன்.

ஆனால், மாலை 5 மணி வரை காத்திருப்பதாக கூறியதை வைகோ கூட்டணிக்கு வர தயாராக இல்லை என ஜெயலலிதாவிடம் ஓபிஎஸ் உள்ளிட்டோர் பொய்யாகக் கூறிவிட்டனர். இதனால் அதிமுக கூட்டணியில் மதிமுக இடம்பெறவில்லை. அந்த தேர்தலில் 15 தொகுதிகளும், ஒரு ராஜ்யசபா சீட்டும் தர ஜெயலலிதா தயாராக இருந்தது பிறகு தான் எனக்கு தெரியவந்தது. 2011ல் கூட்டணி விவகாரத்தில் ஓபிஎஸ் செய்த தவறுக்கு தற்போது பலனை அனுபவிக்கிறார்.

கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தபோது ஒரே ஓட்டமாக சென்னைக்கு ஓடி வந்த தவெக தலைவர் விஜய், நிதி கொடுக்கிறேன் எல்லோரும் என்னை பார்க்க வாருங்கள் என்று அழைத்து தமிழக வரலாற்றில் யாரும் செய்யாத பித்தலாட்டத்தனத்தை செய்திருக்கிறார். இவ்விவகாரத்தில் முதல்வர் அரசியல் செய்ய வேண்டாம் என்றார். ஆனால், நாங்கள் தான் ஆட்சிக்கு வருவோம். திமுகவுக்கும் எங்களுக்கும் தான் போட்டி என சகட்டு மேனிக்கு விஜய் பேசுகிறார். அரசியலில் ஆத்திச்சூடி கூட அறியாத விஜய்,ஆட்சிக்கு வந்து தற்போதே முதல்வர் ஆகிவிட்டது போல கனவுலகத்தில் மிதந்து கொண்டிருக்கிறார். இவ்வாறு அவர் பேசினார்.



# தாம்பரம் மாநகர திமுக பெருங்களத்தூர் வடக்கு மற்றும் தெற்கு பகுதி, தாம்பரம் மேற்கு பகுதி செயல்வீரர்கள் கூட்டம்

தாம்பரம், நவ.09-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர திமுக பெருங்களத்தூர் வடக்கு மற்றும் தெற்கு பகுதி, தாம்பரம் மேற்கு பகுதி செயல்வீரர்கள் கூட்டம் தாம்பரம் மேற்கு பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் தலைமையில் பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் வரவேற்புரையில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் எஸ்.சேகர் முன்னிலையில் 7.11.2025 அன்று மேற்கு தாம்பரத்தில் அமைந்துள்ள கோன் கிருஷ்ணா திரு மண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு கருத்துக ளையும், ஆலோசனை வழங்கினார். உடன் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினரும் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, க.வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ் மற்றும் இக்கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் பகுதிக்குட்பட்ட மாவட்ட, மாநகர, பகுதி, அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக நிலை முகவர்கள் (BLA2,BDA,BLC) கழக மூத்த முன்னோடிகள் என அனைவரும் கலந்து கொண்டனர்.




# தாம்பரத்தில் சாரண- சாரணியர்களுக்கான முப்பெரும் விழா: மாநில விருதுகள் வழங்கிய அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி

தாம்பரம், நவ.09-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரியில் சாரண- சாரணியர் நிறுவன நாள், மாநில விருது வழங்கும் விழா, மற்றும் சாரண இயக்க இணையதள தொடக்க விழா என மூன்று நிகழ்வுகள் ஒரே மேடையில் வெகு விமர்சையாக நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு சுமார் 7,000 சாரண- சாரணியர்களுக்கு மாநில அளவிலான விருதுகளை வழங்கினார்.

பின்னர், காஞ்சிபுரம் மாவட்டம் படப்பையில் சாய்ராம் கல்விக் குழுமம் சார்பில் ரூ.58 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட வட்டார கல்வி அலுவலகத்தை காணொளி வழியாக திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ. எஸ்.ஆர். ராஜா, சாய் பிரகாஷ் லியோ முத்து, முதன்மை செயலாளர் சந்திரமோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

உரையாற்றிய அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி,

"2019 முதல் வழங்கப்படாத சாரண- சாரணியர் மாநில விருதுகளை இவ்வாண்டில் வழங்கி வருகிறோம். தமிழ்நாடு முழுவதும் 75,000 மாணவ மாணவியர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படும்,"

எனத் தெரிவித்தார்.

"சாரண இயக்கம் தனிமனித ஒழுக்கம், சுய கட்டுப்பாடு, சமூகப் பொறுப்பு ஆகியவற்றை கற்றுத்தரும் இயக்கமாகும். திமுக ஆட்சியிலிருந்து உறுப்பினர் எண்ணிக்கை 5 லட்சத்தில் இருந்து 10 லட்சமாக உயர்ந்துள்ளது; விரைவில் 15 லட்சத்தைத் தாண்டும்,"

என்றும் கூறினார்.

"சாரண இயக்கத்துக்கான தலைமை அலுவலகம் அமைக்க ரூ.9 கோடி நிதி முதல்வர் ஒதுக்கியுள்ளார்; பணிகள் நடைபெற்று வருகின்றன,"

எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும், திருச்சியில் நடைபெற்ற சாரண ஜாம்புரி விழாவில் ஆறு நாடுகளிலிருந்து மாணவர்கள் கலந்து கொண்டதாகவும், தமிழ்நாடு மாணவர்கள் பெரும் வெற்றி பெற்றதாகவும் தெரிவித்தார்.



# மேல பாட்டாக்குறிச்சி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் பள்ளி/கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வளைகோல்பந்து விழிப்புணர்வு போட்டிகள்

தென்காசி, நவ.09-

இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தென்காசி மாவட்டம் சார்பாக இந்தியாவில் வளைகோல்பந்து விளையாட்டு துவங்கி நூற்றாண்டை எட்டியதை கொண்டாடுவதை முன்னிட்டு 07.11.2025 அன்று மேல பாட்டாக்குறிச்சி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் பள்ளி/கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வளைகோல்பந்து விழிப்புணர்வு போட்டிகள் நடத்தப்பட்டது.

வளைகோல்பந்து போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழிப்புணர்வு வளைகோல்பந்து போட்டியில் ஆண்கள் பிரிவில் 4 அணிகளும், பெண்கள் பிரிவில் 4 அணிகள் என பள்ளி /கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு இப்போட்டியினை சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய தென்காசி மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் திரு.அறிவழகன் அவர்கள், தென்காசி மாவட்ட வளைகோல்பந்து செயலாளர் திரு. பால்மகேஷ் அவர்கள் உடன் மாவட்ட விளை யாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர் திரு.ராஜேஷ் அவர்கள் கலந்து கொண்டு ஆகியோர்கள் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியினை சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டு அலுவலக பயிற்றுநர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.






# அரசுப்பள்ளி மாணவர்களின் அறிவியல் மற்றும் கணித அறிவை வளர்ப்பதற்கான கல்விச்சுற்றுலா

சிவகங்கை, நவ.09-

சிவகங்கை மாவட்டம் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவியல் மீது உள்ள ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளவும் படைப்பாற்றல் சிந்தனைகளை தூண்டவும் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த கருவிகளை உருவாக்க ஏதுவாக இக்கல்விச் சுற்றுலா பள்ளிக் கல்வித் துறையினால் ஏற்பாடு செய்யப்ப ட்டுள்ளது என சிவகங்கை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் க.பால தண்டாயுதபாணி தெரிவித்தார்.



அரசுப் பள்ளி மாணவர்களது கற்றல் திறன்கள் வளப்பட தமிழக பள்ளிக்கல்வித்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முன்னெடுப்புகளின் நீட்சியாக 2025-26 ஆம் கல்வியா ண்டில் அனைத்து அரசுப்பள்ளி மாணவர்களில் 912 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அறிவியல் மனப்பான்மை கணித அறிவை மற்றும் அறிவியல் உபகரணங்களை மாணவர்களே உருவாக்குவது போன்ற கற்றல்சார் திறன்கள் மாணவர்கள் மத்தியில் வளப்பட மேம்படுத்திட மாணவர்களது கணிதம் அறிவியல் பாடங்களில் கற்றல் அடைவு நிலையை அடிப்படையாக வைத்தும் வருகைப்பதிவு திறனறித்தேர்வு மன்றச்செயல்பாடுகள் கலைத்திருவிழா விளையாட்டுப்போட்டிகள் முதலியவற்றில் பங்கேற்பு மற்றும் புத்தகம் வாசிக்கும் பழக்கம் தலைமைத்துவம் போன்ற மதிப்பீடுகளின் படி இக்கல்விச்சுற்றுலாவிற்கு மாணவர்கள் பள்ளித் தலைமையாசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்கள் அறிவியல் மையம் அருங்காட் சியக ங்கள் போன்ற இடங்களுக்கு களப்பயணமாக கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல பள்ளிக்கல்வித்துறை சார்பாக ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் மாநிலத் திட்ட அலுவலகத்திலிருந்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி 12 ஒன்றியங்களில் 138 பள்ளிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 333 மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கு வழிகாட்டுதல் வழங்கிட பொறுப்பாளர்களாக 48 ஆசிரியர்கள் 5.11.25 முதல் 7.11.25 வரை களப்பயணமாக கல்விச்சுற்றுலா சென்றனர்.

5.11.25 அன்று தேவகோட்டை கல்வி மாவட்டத்தைச் சார்ந்த கல்லல் கண்ணங்குடி தேவகோட்டை சிங்கம்புணரி சாக்கோட்டை எஸ். புதூர் திருப்பத்தூர் போன்ற 7 ஒன்றியங்களிலிருந்து 194 மாணவர்கள் புதுக்கோட்டை முருகப்பா அறிவியல் மையம் புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகம் போன்ற இடங்களுக்கும் 6.11.2025 அன்று சிவகங்கை காளையார்கோவில் இளையான்குடி போன்ற ஒன்றியங்களிலிருந்து 98 மாணவர்கள் காரைக்குடி மின்வேதியியல் ஆராய்ச்சி மையம் காரைக்குடி செட்டிநாடு வேளாண்மைக்கல்லூரி போன்ற உயர்கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பார்வையிட்டனர்.

7.11. 25 அன்று மானாமதுரை திருப்புவனம் ஒன்றியத்தைச் சார்ந்த 89 மாணவர்கள் கீழடி தொல்பொருள் அருங்காட்சியகம் மதுரை வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் கலைஞர் நூற்றாண்டு நூலகம் முதலிய இடங்களுக்கு கல்விச்சுற்றுலா சென்றனர்.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் அனுமதியுடனும் வழிகாட்டுதலுடனும் இக்கல்வி சுற்றுலாவுக்கு மாணவர்கள் பாதுகாப்பாக சென்று வர அரசு பேருந்துகள் நன்முறையில் ஏற்பாடு செய்யப்பட்டது .ஆகவே இக்கல்வி சுற்றுலாவில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களும் நமது ஆட்சியர் அவர்களுக்கு நன்றி கூறினார்கள்.

இக்கல்விச் சுற்றுலாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் உதவித் திட்ட அலுவலர் பீட்டர் லெமாயு மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ செய்திருந்தனர்.



# பல்லாவரம் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் திரைப்பட கலாச்சார கொண்டாட்டம்

## வெற்றிமாறன் வேல்ஸ் இணைந்து 'வடசென்னை 2' தயாரிப்பு அறிவிப்பு

பல்லாவர, நவ.09-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில், இயக்குநர் வெற்றிமாறன் மற்றும் வேல்ஸ் பல்கலைக்கழகம் இணைந்து திரைப்பட கலாச்சாரம் குறித்த சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியை பல்கலைக்கழக நிறுவனர் ஐசரி கணேஷ் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். இதில் முன்னாள் மேயர் சைதை துரைசாமி, நடிகர் சத்யராஜ், இயக்குநர் அமீர், தயாரிப்பாளர் தனஜெயன், நடிகை ரேகா உள்ளிட்டோர் கலந்து கொண்டு, இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர்களின் தமிழ் சினிமா பங்களிப்பை போற்றினர்.

சிறந்த புகைப்படக் கலைஞர்களுக்கு ரூ.25,000 முதல் ரூ.1,00,000 வரை காசோலைகள் வழங்கப்பட்டன. பல திரைபட கலைஞர்கள், தயாரிப்பாளர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த வேல்ஸ் பல்கலைக்கழக நிறுவனர் ஐசரி கணேஷ், இயக்குநர் வெற்றிமாறனின் சர்வதேச திரைப்பட மற்றும் கலாச்சார நிறுவனமும், வேல்ஸ் பிலிம் இண்டர்நேஷனலும் இணைந்து 'வடசென்னை 2' திரைப்படத்தை தயாரிக்க உள்ளதாக அறிவித்தார். மேலும், புதிய 'வேல்ஸ் மியூசிக்கல்ஸ்' நிறுவனம் மூலம் சிறந்த பாடல்களை வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்தார்.



■ சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில், பாதுகாக்கப்பட்டு வரும் மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



## அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற

# நலம் காக்கும் ஸ்டாலின் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, நவ.09-

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் ஸ்ரீ முழு உடல் பரிசோதனை முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தரமான மருத்துவ சிகிச்சையினை வழக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மக்களை தேடி மருத்துவம், நம்மைக் காக்கும் 48, உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகி றார்கள். அதன் தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சையினை அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்று வழங்கிட வேண்டும் என்ற நோக்கத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு நலம் காக்கும் ஸ்டாலின் முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாம்கள் வாரம் தோறும் சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகின்றது.

இம்முகாமில் 17 உயர் சிறப்பு மருத்துவ பிரிவுகளை சார்ந்த மருத்துவர்களை கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றது. மேலும் பொதுமக்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ வழங்குவதற்கும். மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திற னாளிகளுக்கான அடையாள அட்டை வழங்கு வதற்கும் மற்றும் தொழிலாளர்களுக்கு காப்பீடு அட்டை அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான அடையாள அட்டை வழங்குவதற்கும் சம்பந்தப்பட்ட துறை வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்று தெற்கு தாமரைக்குளம், அகஸ்தீஸ்வரம், கொட்டாரம் ஆகிய பேரூராட்சிகள், கன்னியாகுமரி நகராட்சி, மற்றும் வடக்கு தாமரைக்குளம், கரும்பாட்டுர், சுவாமிதோப்பு, கோவளம் உள்ளிட்ட ஊராட்சிகளுக்குட்பட்ட பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று கொண்டிருக்கிறது. இம்முகாமில் 1500க்கும் மேற்பட்ட மருத்துவ பயனாளர்கள் கலந்துகொண்டுள்ளார்கள்.

மேலும் முகாமிற்கு வருகை தரும் பொதுமக்கள் எந்த விதமான சிகிச்சை பெற வந்திருக்கிறார்கள் என்று மருத்துவ பயனாளர்களை நேரில் சந்தித்து கேட்டறியப்பட்டது. முகாமிற்கு வரும் மருத்துவ பயனாளர்கள் விவரங்களை பதிவேடுகளில் பதிவு செய்கிறதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் இணை இயக்குநர் மருத்துவப்பணிகள் மரு.சகாய ஸ்டிபன் ராஜ், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அரவிந்த் ஜோதி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.தினேஷ் சந்திரன், கன்னியாகுமரி நகர்மன்ற தலைவர் திரு.குமரி.ஸ்டீபன், துறை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை

## சேலம் மாவட்டம், வீரபாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி நேரில் ஆய்வு

சேலம், நவ.09-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை சேலம் மாவட்டம், வீரபாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நாழிக்கல்பட்டி, அம்பேத்கர் நகர் பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். ஆய்விற்கு பின் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரதிருத்த பணிகள் - 2026 அக்டோபர் மாதம் 28 ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் கணக்கெடுப்பு பணிகள் சேலம் மாவட்டத்தில் 04.11.2025 அன்று முதல் டிசம்பர் 4 ம் தேதி வரையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை சேலம் மாவட்டம், வீரபாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நாழிக்கல்பட்டி, அம்பேத்கர் நகர் பகுதியில் ஆய்வு மேற்கொண்டு இந்திய தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றி வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ள 3,264 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் தங்களுக்கான வாக்குச் சாவடிகளில் 04.11.2025 அன்று முதல் அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவத்தினை வழங்கி வருகின்றனர்.

மேலும், தொடர்புடைய வாக்குச்சாவடிக்கு உட்பட்ட வாக்காளர்களில் நிரந்தரமாக குடிபெயர்ந்த வாக்காளர்கள், இறந்து போன வாக்காளர்களின் விவரங்களை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் முகவர்கள் மூலம் அறிந்து கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்த கணக்கீட்டுப் படிவங்களை பெற வரும் தேதியினை முன்கூட்டியே வாக்காளர்களுக்கு தெரியப்படுத்தி அனைத்து வாக்காளர்களிடமிருந்தும் கணக்கீட்டுப் படிவங்களை பெறுவதை உறுதி செய்திடவும் இந்த ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

## பழங்குடியின இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு மற்றும் வேலைவாய்ப்புக்கான பயிற்சி வழிகாட்டுதல் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது

சேலம், நவ.09-

சேலம் மாவட்டம், மல்லூர், தி கொங்கு பாலிடெக்னிக் கல்லூரியில் பழங்குடியின இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு மற்றும் வேலைவாய்ப்புக்கான பயிற்சி வழிகாட்டுதல் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:



பழங்குடியினர் பெருமை தின விழா 01.11.2025 முதல் 15.11.2025 வரை நடத்தப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக இன்று தமிழ்நாடு அரசு பழங்குடியினர் நலத்துறை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து, பழங்குடியின இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை உறுதிசெய்யும் வகையில் திறன் மேம்பாட்டு மற்றும் வேலைவாய்ப்புக்கான பயிற்சி வழிகாட்டுதல் முகாம் "தொல்குடித் தொடுவானம்" இன்றைய தினம் நடத்தப்படுகிறது. பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கு வேலைவாய்ப்புகளை உறுதிசெய்யும் சர்வதேசத் தரத்திலான பயிற்சிகளைப் பெற்று, இளைஞர்கள் தங்களின் ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள இது ஒரு மிகச் சிறந்த வாய்ப்பாகும்.

இவ்வழிகாட்டுதல் முகாமில் சேலம், நாமக்கல், தருமபுரி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய 10 மாவட்டங்களைச்சேர்ந்த 400 க்கும் மேற்பட்ட பழங்குடியின இளைஞர்கள் கலந்து கொண்டனர். இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகள் குறித்தும் இப்பயிற்சியில் கலந்து கொள்ளும்பொழுது அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

இத்திறன் மேம்பாட்டுப்பயிற்சியில் பங்கேற்கும் இளைஞர்களின் தொழில் வாய்ப்புகளைப் பெருக்கும் வகையில் ஜெர்மன் மொழி, கனரக மற்றும் இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி, துணை சுகாதாரப் படிப்புகள் (Allied Health Courses) மற்றும் டிராக்டர் உற்பத்தி மெக்கானிக் உள்ளிட்ட மதிப்புமிக்க பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியின் முடிவில் முன்னணி தனியார் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு பெற்று தரப்படும். பழங்குடியின இளைஞர்கள் இந்த அரிய வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்தி, தொழில் வாய்ப்புகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டுமென இவ்வழிகாட்டுதல் முகாமில் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பழங்குடியின நலத்துறையின் இயக்குநர் அவர்களின் நேர்முக உதவியாளர் திரு.தியாகராஜன், கல்லூரியின் தாளாளர், பல்வேறு மாவட்ட பழங்குடியின நலத்துறையின் திட்ட அலுவலர்கள், இளைஞர்கள் பங்கேற்றனர்.



■ சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் புனித மைக்கேல் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், இன்று (7.11.2025) தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் உயர்கல்வித்துறை ஆகியவைகளின் சார்பில், மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் சொற்பொழிவாளர் பத்மஸ்ரீ முனைவர் நர்த்தகி நடராஜ் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், புனித மைக்கேல் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி தாளாளர் திரு.ஸ்டாலின், மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் ச.அந்தோனி டேவிட் நாதன். புனித மைக்கேல் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் திருமதி கற்பகம், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திருமதி சீதாலட்சுமி, நிகழ்ச்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச.இராமமூர்த்தி, பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



## இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் டாக்டர் மா.வள்ளலார் வளர்ச்சி திட்ட பணிகளை பார்வையிட்டு ஆய்வு

இராமநாதபுரம், நவ.09-

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் மற்றும் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் டாக்டர் மா.வள்ளலார் வளர்ச்சித் திட்ட பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இந்த ஆய்வின்போதுமாவட்ட கணிப்பாய்வு அலுவலர் அவர்கள் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலையினை பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து இராமநாதபுரம் நகர் வெளிப்பட்டினம் நியாய விலை கடை மற்றும் ஆர்.எஸ். மங்கலம் வட்டம், ஆவரேந்தல் ஊராட்சியில் உள்ள நியாயவிலை கடைக்கு சென்று குடும்ப அட்டைதாரருக்கு வழங்கப்பட்டு வரும் உணவுப் பொருட்கள் விபரம் குறித்தும் மற்றும் பதிவேடுகள், பொருட்களின் இருப்பு விவரம் குறித்தும் ஆய்வு செய்வதுடன் தாயுமானவர் திட்டத்தின் கீழ் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு இல்லங்களுக்கு சென்று குடிமைப் பொருள்கள் வழங்கும் விபரம் குறித்து கேட்டறிந்துடன் பதிவேடுகளை பார்வையிட்டு;. குடும்ப அட்டைதாரர்களுக்கு தடையின்றி உணவுப் பொருட்கள் வழங்கும் வகையில் போதிய அளவு இருப்பு உள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என பணியாளர்களுக்கு தெரிவித்தார்

அதனைத் தொடர்ந்து ஆர்.எஸ்.மங்கலம் வட்டம், பொட்டக்கோட்டை மற்றும் பணிக்கோட்டை ஊராட்சி மற்றும் இராமநாதபுரம் வட்டம், அச்சுந்தன்வயல் ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தார் சாலையினை பார்வையிட்டு; அதன் தரம் குறித்து கணிப்பாய்வு அலுவலர் டாக்டர் மா.வள்ளலார் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்கள்

## கன்னியாகுமரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டு பணி 100 சதவீதம் வெற்றிபெற பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா வேண்டுகோள்

கன்னியாகுமரி, நவ.09-

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி, 04.11.2025 முதல் தமிழ்நாடு முழுவதும் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டு படிவம் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நமது கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், விளவங்கோடு, கிள்ளியூர், பத்மநாபபுரம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 15,92,872 வாக்காளர்கள் உள்ளார்கள். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி வாக்காளர்களின் வீடுகளுக்கு வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று கணக்கெடுப்புப் படிவத்தினை வழங்கி வருகிறார்கள்.

அதனடிப்படையில் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் தங்கள் தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கணக்கீட்டு படிவத்தை வாக்காளர்களுக்கு வழங்கி வருவதை நேரில் பார்வையிட்டு



ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். 04.11.2025 முதல் 06.11.2025 வரை கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதியில் 1,75,425, நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் 1,16,818, குளச்சல் சட்டமன்ற தொகுதியில் 1,60,949, பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதியில் 1,22,395, விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் 1,24,535, கிள்ளியூர் சட்டமன்ற தொகுதியில் 1,66,714 என மொத்தம் 8,66,836 கணக்கீட்டு படிவங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் 1702 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, கணக்கீட்டு படிவங்கள் வழங்கி வருகிறார்கள். மீதமுள்ள படிவங்களை விரைவில் வாக்காளர்களுக்கு வழங்க வாக்காளர் பதிவு அலுவலர்கள், வாக்காளர் உதவி அலுவலர், வாக்காளர் பதிவு அலுவலர்களின் மேற்பார்வையாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

மேலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கணக்கெடுப்பு படிவத்தினை பூர்த்தி செய்வதில் ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் மாவட்ட தேர்தல் அலுவலக இலவச வாக்காளர் உதவி எண் 046521950 என்ற எண்ணிலும், www.eci.gov.in, elections.tn.gov.in/, kanniyakumari.nic.in/election/ முகவரிகளிலும் தெரிந்து கொள்ளலாம். https://voters.eci.gov.in என்ற ஆன்லைன் இணைய முகவரியிலும் விண்ணப்பிக்கலாம். கன்னியாகுமரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டு பணி 100 சதவீதம் வெற்றிபெற பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்துள்ளார்கள்.

## கன்னியாகுமரி மாவட்ட வாக்காளர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டு படிவத்தினை பூர்த்தி செய்ய உள்ளாட்சி அமைப்புகளில் அமைக்கப்பட்டுள்ள உதவி மையங்களை நாடலாம்


### மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தகவல்

கன்னியாகுமரி, நவ.09-

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி, 04.11.2025 முதல் தமிழ்நாடு முழுவதும் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டு படிவம் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நமது கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், விளவங்கோடு, கிள்ளியூர், பத்மநாபபுரம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 15,92,872 வாக்காளர்கள் உள்ளார்கள். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி வாக்காளர்களின் வீடுகளுக்கு வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று கணக்கெடுப்புப் படிவத்தினை வழங்கி வருகிறார்கள். அதனடிப்படையில் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் தங்கள் தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கணக்கீட்டு படிவத்தை வாக்காளர்களுக்கு வழங்கி வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். 04.11.2025 முதல் 07.11.2025 வரை கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதியில் 2,26,221, நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் 1,52,079, குளச்சல் சட்டமன்ற தொகுதியில் 2,10,465, பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதியில் 1,62,040, விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் 1,66,205, கிள்ளியூர் சட்டமன்ற தொகுதியில் 2,06,399 என மொத்தம் 11,23,409 கணக்கீட்டு படிவங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளது. இது மொத்த வாக்காளர் கணக்கீட்டு பட்டியலில் 70.53 சதவீதம் ஆகும்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் 1702 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, கணக்கீட்டு படிவங்கள் வழங்கி வருகிறார்கள். மீதமுள்ள படிவங்களை விரைவில் வாக்காளர்களுக்கு வழங்க வாக்காளர் பதிவு அலுவலர்கள், வாக்காளர் உதவி அலுவலர், வாக்காளர் பதிவு அலுவலர்களின் மேற்பார்வையாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கணக்கெடுப்பு படிவத்தினை பூர்த்தி செய்வதில் ஏதேனும்




சந்தேகங்கள் இருந்தால் மாவட்ட தேர்தல் அலுவலக இலவச வாக்காளர் உதவி எண் 046521950 என்ற எண்ணிலும், www.eci.gov.in, elections.tn.gov.in/, kanniyakumari.nic.in/election/ முகவரிகளிலும் தெரிந்து கொள்ளலாம். https://voters.eci.gov.in என்ற ஆன்லைன் இணைய முகவரியிலும் விண்ணப்பிக்கலாம். கன்னியாகுமரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டு பணி 100 சதவீதம் வெற்றிபெற பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வாக்காளர்களுக்கு 2002ம்ஆண்டு முந்தைய சிறப்பு தீவிர திருத்தத்தில் உள்ள வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களின் விவரங்கள் மற்றும் முந்தைய சிறப்பு தீவிர திருத்தத்தில் உள்ள வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர் உறவினர்களின் விவரங்கள், சட்டமன்ற தொகுதி, பாகம் எண், வரிசை எண் உள்ளிட்டவைகள் பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் 2002ம் ஆண்டு வாக்காளர் பட்டியல் விவரங்களை தெரிந்துகொள்ள https://voters.eci.gov.in/, https://erolls.tn.gov.in/Rollpdf/SIR 2002.aspx <https://erolls.tn.gov.in/Rollpdf/SIR%202002.aspx> என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்தோ அல்லது உங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் விவரங்களை தெரிந்துகொள்ளலாம். தொடர்ந்து கணக்கீட்டு படிவத்தில் மேல்குறிப்பிட்ட விவரங்களை பூர்த்தி செய்து, அனைத்தும் சரிபார்த்து, அதை உறுதி செய்து தங்களது கையொப்பத்தை இட வேண்டும். படிவத்தினை வாக்காளர் நிலை அலுவலர்களிடம் ஒப்படைக்கும் போதும் வாக்கு சாவடி நிலை அலுவலர்களின் கையொப்பம் இருப்பதை உறுதி செய்து விண்ணப்பத்தினை வழங்க வேண்டும்.

மேலும் கணக்கீட்டு படிவத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்களை தெரிந்து கொள்ளவும் சந்தேகங்களை தெளிவுபடுத்தவும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள உதவி மையங்களுக்கு நேரில் சென்று விவரங்கள் தெரிந்து கொள்ளலாம். தொடர்ந்து இலவச வாக்காளர் உதவி எண் 04652 1950 என்ற எண்ணை தொடர்பு கொண்டும் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.



# சேம்பார் நடுநிலைப்பள்ளியில், பள்ளி மேலாண்மை குழு கூட்டம்





காளையார் கோவில், நவ.09-
சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பள்ளி மேலாண்மை குழு தலைவி டேவிட் அருள் ஷாலினி தலைமை ஏற்றார். பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியர் சுரேஷ் முன்னிலையில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் சுரேஷ் பள்ளி மேலாண்மை குழு கூட்டப் பொருள்களை விளக்கினார் . எண்ணும் எழுத்தும் திட்டம், திறன் இயக்கம், அனைத்து குழந்தைகளையும் பள்ளிகளில் சேர்த்தல், உயர் கல்விக்கு வழிகாட்டல், ஆதார் கைரேகை பதிவேற்றம் செய்தல், மகிழ் முற்றம் செயல்பாடுகள், மன்ற செயல்பாடுகள், மணற்கேணி செயலி தூதுவர் செயல்பாடுகள், மற்றும் ஆதார் புதுப்பித்தல் போன்ற கூட்டப் பொருட்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. நவம்பர் 14 குழந்தைகள் தின விழாவை மிக சிறப்பாக கொண்டாடுவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதிமலர் மற்றும் தன பாக்கியம் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆசிரியர் முருகன் நன்றியுரை கூறினார். பள்ளி மேலாண்மை குழு கூட்டத்தில் டேவிட் அருள் ஷாலினி, ஜெயா, நித்தியா, ஆரோக்கிய அருள் புனிதா, ஆரோக்கிய ரோசியா, அருள் ஜெனிபர், மீனா ரீட்டாராணி அருள் ஜேசு பவுலா, ஜெனிட்டா ராணி, ஜெஸ்போனியா, சத்தியம்மாள் லீமா ரோஸி, ஆரோக்கிய ஜோஸ்பின் டெய்சி., செபஸ்தி அம்மாள், ஆரோக்கிய ஜூலி, கலைச்செல்வி ,காளீஸ்வரி, கிறிஸ்டின் மேரி, புவனேஸ்வரி, முருக வள்ளி, ஆரோக்கிய அருள் மலர், மற்றும் நிகோமி கிறிஸ்டியா ஆகிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# மூத்த தமிழறிஞர் புலவர் ஆ.பழனி நூல்கள் நாட்டுடைமை தமிழக முதலமைச்சருக்குப் பாராட்டு

காரைக்குடி, நவ.09-
சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மூத்த தமிழறிஞர், மண்ணின் மைந்தர்,புலவர் அய்யாஆ. பழனி அவர்களின் படைப்பிலக்கியத் தமிழ்காப்பியம், நாடகம், செம்மொழி செம்பதிப்பு ஆய்வு கவிதை நயமிக்க18 நூல்களையும், தமிழர் தலைவர். ஆசிரியர் அய்யா. கி.வீரமணி அவர்களின் பெருமுயற்சியில், தமிழ்நாடு அரசு, தமிழ் வளர்ச்சித் துறைதுணையோடு நாட்டுடமை ஆக்கியதற்கு, திராவிட மாடல் அரசு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆசிரியர் கி. வீரமணிக்கும் பாராட்டுடன் நன்றியும் தெரிவித்தும், புலவரின் 94 ஆம் ஆண்டு பிறந்தநாள் போற்றுதல் விழாவும், கடந்த (நவ.07) வெள்ளிக்கிழமை காலையில், செக்காலை "குறள் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இதற்கு அனிச்சம் அறக்கட்டளை"த் தலைவர் சாமி திராவிடமணி தலைமை வகித்தார். மாவட்ட தி.க தலைவர் ம.கு.வைகறை முன்னிலை வகித்தார்.தி.க.தலைமைக்கழகசொற்பொழிவாளர் தி. என்னாரசு பிராட்லா வரவேற்றார். புலவரின் அண்ணன் மகள்கள் கா. உமையாள், ச.மணிமேகலை, அறக்கட்டளை உறுப்பினர்கள் பள்ளத்தூர் பெரி.சண்முகம், கண்டனூர் கா. இராமநாதன், தமிழார்வலர்.குமணன் முடியரசன், தேவகோட்டை வீர.முருகப்பன்,மாவட்ட ப.க. ஆலோசகர். விஞ்ஞானி. சு. முழுமதி, இராஜதவம், சரவணன், மாவட்ட ப.க.செயலாளர் ந.செல்வராசன், ஆகியோர் மலர்மாலை அணிவைத்து மரியாதை செய்தார்கள்.



## அணைக்கட்டு (கி) ஒன்றிய பொருளாளர் ஜெய்சங்கர் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு புத்தகம் வழங்கி வாழ்த்து தெரிவிப்பு

வேலூர், நவ.09-
வேலூர் மாவட்டத்திற்கு நலதிட்ட உதவிகள் வழங்க வருகை புரிந்த தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கோட்டை மைதானத்தில் நலதிட்டங்களை வழங்கியதை தொடர்ந்து, அணைக்கட்டு சட்டமன்ற தொகுதியில் திமுக தொண்டர்களை சந்தித்து தேர்தல் பாக முகவர்கள் ஆலோசனைகள் நடந்தது. இதில் அணைக்கட்டு கிழக்கு ஒன்றிய திமுக பொருளாளர் ஜெய்சங்கர் துணை முதல்வரை சந்தித்து 2026லும் வெற்றிப் பெறுவது குறித்து கலந்துரையாடினார். இதனைத் தொடர்ந்து அணைக்கட்டு ஒன்றிய பொருளாளர் ஜெய்சங்கர் துணை முதல்வருக்கு புத்தகம் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

# காரைக்குடி சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் 150வது ஆண்டு வந்தே மாதரம் பாடல் விழா





காரைக்குடி, நவ.09-
சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, விசாலன் கோட்டை, கலாம் கவி கிராமத்தில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன் அவர்களின் வழிகாட்டுதலின் படி தேசபற்று உணர்வை வளர்க்கும் நோக்கில், 'வந்தே மாதரம்' பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டு நிறைவை முன்னிட்டு 07.11.2025 அன்று சிறப்புவிழா நடைபெற்றது. கல்லூரியின் தேசிய மாணவர் படை மாணவர்கள் மரக்கன்றுகளை நட்டதன் மூலம் பசுமை மற்றும் தேசபற்று ஆகிய இரண்டையும் இணைத்து சிறந்த செய்தியை வெளிப்படுத்தினர்.

மாணவர்கள் தேசபற்று பாடல்கள், கவிதைகள், உரைகள் மூலம் நிகழ்ச்சியை மேலும் சிறப்பித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் சென்னை சோகா இகெதா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் கண்மணி சுப்பிரமணியன், கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் முனைவர் சு. முரளி கிருஷ்ணசாமி, கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் மா.விஷ்ணுப்பிரியா, முதன்மை கல்வி அலுவலர் திரு கோவிந்தராஜ், கல்லூரியின் செயலாளர் திரு. கந்தப்பழம், தேசிய மாணவர் படையின் இணை அதிகாரி (ANO) Lt. முனைவர் அ. கவியரசு (உதவி பேராசிரியர் தோட்டக்கலைத்துறை), மற்றும் பேராசிரியர்கள் பணியாளர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இந்த நிகழ்ச்சியை சிறப்பாக நடத்த உறுதுணையாக இருந்தனர்.

மாணவர் தி. லக்ஷ்மணன் மற்றும் மாணவி வி. சாருலதா இவர்கள் இந்த நிகழ்ச்சியை மிக சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

இந்நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் தேசபற்று உணர்வை ஊட்டியதோடு, மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பொறுப்பு மற்றும் சமூகச் சேவை பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.



# மகளிர்களுக்கான உடற்பயிற்சி மையம் அமைக்க பூமி பூஜை

கோவை, நவ.09-
கோவை மாநகராட்சி வார்டு எண் 70க்குட்பட்ட சின்ன எல்லை சந்தில் பெண்கள் உடற்பயிற்சி மையம் அமைப்பதற்கான பூமி பூஜை மாமன்ற உறுப்பினர் சர்மிளா சுரேஷ் நாராயணன் தலைமையில் நடைபெற்றது.

மாநகராட்சி கவுன்சிலர் தேர்தலில் வாக்கு சேகரிக்கும் போது தேர்தல் வாக்குறுதியாக இந்த பகுதியில் கட்டணமில்லா பெண்கள் உடற்பயிற்சி மையம் அமைக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டது.

அதன்பேரில் மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ 20 இலட்சம் மதிப்பீட்டில் சின்ன எல்லை சந்தில் கட்டணமில்லா பெண்கள் உடற்பயிற்சி மையம் அமைக்க பூமி பூஜை நிகழ்ச்சி நடைபெற்றது.

இது குறித்து கவுன்சிலர் சர்மிளா சுரேஷ் நாராயணன் கூறுகையில் தமிழகத்தில் கழக தலைவர் ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சி மிக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தேர்தல் வாக்குறுதி நிறைவேற்ற நிதிஉதவி அளித்த தமிழக முதல்வருக்கும் அமைச்சர்கள் மற்றும் மாநகராட்சி நிர்வாகத்திற்கும் வார்டு சார்பாகவும் எனது சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

மேலும் பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் உதவி பொறியாளர் சதிஷ் குமார் பாகமுகவர் ஹேமந்த் குமார் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் வட்ட கழக செயலாளர் சுரேஷ் நாராயணன், கழக நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் மகளிரணியினர் ரமணி புவனேஸ்வரி, சித்ரா, சாந்தி, புவனேஸ்வரி ,பத்மாவதி, தனபாக்கியம், பொன்னம்மாள்,விஜியா ,மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்டம் வடகரைகீழ்ப்பிடாகை வட்டாரம் வல்லம் ஆர்.சி.மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின்பன்நோக்கு மருத்துவ முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், கலந்து கொண்டு பார்வையிட்டார். இம்முகாமில், மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் வி.கோவிந்தன், தொழிலாளர் உதவி ஆணையர் திருமதி அ.சி.கௌரி ஜெனிபர், வட்டார மருத்துவ அலுவலர் திருமதி சுந்தராம்பாள், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் நாகராஜன் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மாவட்ட திட்ட அலுவலர் திரு.முத்துமாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்மாநில அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள் சங்கம் சார்பில் வேலூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில்

# அங்கன்வாடி ஊழியர்களின் எட்டு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கைபேசியில் டார்ச் லைட் அடித்து தமிழக முதல்வரின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்





வேலூர், நவ.09-
வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், ஆஞ்சநேயர் கோயில் அருகே, தமிழ்மாநில அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியா ளர்கள் சங்கம் சார்பில் வேலூரில், அங்கன்வாடி ஊழியர்களின் எட்டு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, கைபேசியில் டார்ச் லைட் அடித்து தமிழக முதல்வரின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் எட்டு அம்ச கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி மாபெரும் ஆர்ப்பாட்டம் மாவட்ட இணை செயலாளர் கே. ஜூலி தலைமையிலும், மாநில இணை தலைவர் போராட்ட உரிமை சி.தேவி, ரம்யா வாழ்த்துரை வழங்கையில், மாநில செயற்குழு உறுப்பினர் வேதவல்லி, மாவட்ட துணை செயலாளர் எல்.உமா, ஆகியோர் முன்னிலையிலும், பேனர் மற்றும் டார்ச் லைட்டுகளை கையில் பிடித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வேலூர் மாவட்ட அனைத்து வட்டாரங்களில் உள்ள அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள் ஒன்றிணைந்த ஆர்ப்பாட்டம். 1993ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு உடனடியாக பதவி உயர்வு வழங்க வேண்டியும், அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களை அரசு ஊழியராக மாற்றி காலமுறை ஊதியம் வழங்க வேண்டியும், பணி ஓய்வு பெறும் அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி ரூபாய் 10 லட்சம், ரூபாய் 5 லட்சம் பணிக்கொடையாக வழங்க வேண்டியும், பணியில் இருந்து ஓய்வு பெற்ற ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு அகவிலைப் படியுடன் கூடிய ஓய்வூதியம் வழங்க வேண்டியும், தமிழகத்தில் உள்ள அங்கன்வாடி மையங்களில் உள்ள காலி பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியும், போஷன் ட்ராக்கர் செயலியில் முகம் அங்கீகாரம் (recognition) பதிவேற்றம் செய்வதை அங்கன்வாடி ஊழியர்களை கட்டாயப்படுத்துவதை உடனடியாக கைவிட வேண்டியும், பணியை எளிமையாக்க புதிய செல்போன் மற்றும் 5ஜி செல்போன்களை உடனடியாக வழங்க வேண்டியும், குழந்தைகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பள்ளிகளை போலவே மே மாதம் முழுவதும் அங்கன்வாடிகளுக்கும் விடுமுறை வழங்க வேண்டி உள்ளிட்ட எட்டு அம்ச கோரிக்கைகளை தமிழக அரசுக்கு முன்வைத்து உடனடியாக நிறைவேற்றக்கோரி அங்கன்வாடி அனைத்து பணியாளர்கள் சுமார் 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மாலை நேர இருள் சூழ்ந்ததால் டார்ச் லைட்டுகளை அடித்து கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைபாடில்லா குழந்தைகளை உருவாக்குவதில் முதன்மை இடத்தில் இருக்கும் அங்கன்வாடி ஊழியர்கள் தனது பாதி வாழ்நாளில் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் குழந்தைகளை ஆரோக்கியமாக உருவாக்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அங்கன்வாடி ஊழியர்கள் துறை சார்ந்த பணி மட்டுமே இல்லாமல் மற்ற துறைகளில் பணிகளை செய்ய நிர்பந்தப்படுத்தி வருவது தொடர்கதையாக உள்ளது. எனவே அங்கன்வாடி ஊழியர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 2021 தேர்தல் வாக்குறுதியின் படி அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களை அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டும் என்றும் பல கோரிக்கைகளை வலியுறுத்தி டார்ச் டார்ச் லைட்டுகள் அடித்து கோஷங்களை எழுப்பி ஆர்ப்பா ட்டத்தில் ஈடுபட்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161